செய்யுமா ? இன்றைய நிலையில் இதுபோன்று குடும்பத் தலைவர் இறந்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக் கூடியவர்கள் மனு கொடுத்து, நிவாரணம் கிடைக்காமல் வட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அலைந்துகொண்டிருக் கிறார்கள். அரசு தரப்பிலிருந்து எந்தவித உத்தரவும் கிடைக்கவில்லை. ஆதலால் நிவாரணம் வழங்க முடியாது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, உடனடியாக அந்த நிவாரணத்தை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் இன்றைய தினமே உத்தரவு வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே உத்தரவு வழங்கப் பட்டிருக்கிறது எங்காவது அந்த வட்டாட்சியர்கள் தர வில்லை என்று இடத்தை குறிப்பிட்டுச் சொன்னால், ஏன் கொடுக்கவில்லை என்று அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல், அதையே எல்லா வட்டாட்சியர்களுக்கும் ஒரு அறிக்கை மூலமாக கொடுத்து, நீங்கள் கொடுங்கள் என்று சொல்லுவதற்கும் வாய்ப்பாக இருக்கும். யாராவது அதைக் கொடுக்கவில்லை என்று பெயரை சொன்னால், அந்த மனுவை என்னிடத்தில் கொடுத்தால் நான் உடனே அதற்கு ஏற்பாடு செய்வேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 222, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

222—

தாதஸ்குப்பம் கிராமத்தில் மேல்நிலைப்பள்ளி

* 11035—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி தாதஸ்குப்பம் கிராமத்தில் மேல்நிலைப்பள்ளி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனி வருகிற கல்வியாண்டில் இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக் கின்றபோது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற சொல்லுக்கு இடம் கொடுக்காமல் பொற்கால ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற எனது தெய்வத்தாய் ஆட்சியில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதை விரைவில் நடைமுறைப்படுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் மானியத்தை நிறைவேற்றி இருக்கிறோம். ஆகவே, இந்த பட்ஜெட் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு இதைப்பற்றி ப்ரிசீலிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நாங்கள் பரிசீலனைக்கு எடுக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 223, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

223

கொடுமுடியில் அரசு கலைக் கல்லூரி அல்லது பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரி.

*11756 திருமதி கவிநிலவு தர்மராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடியில் அரசு கலைக் கல்லூரி அல்லது பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் உரைத்திருக்கிறார்கள். நேற்றைய தினம் மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களும் நூறுமுறை யோசித்த பிறகு கல்லூரியை அமைக்கக் கூடிய எண்ணத்தை நாங்கள் எடுக்க இருக்கிறோம் என்பதை நாங்களும் உணர்ந்திருக்கிறோம். இருந்தாலும் மொடக்குறிச்சி தொகுதியிலே இதுவரை கல்லூரி இல்லாத ஒரு கனவு